# குண்டசாலை பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குண்டசாலை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மூன்று வருட காலமாக நிலவும் ரூபா 15,766 தொகையான தொங்கல் கணக்கு வரவு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 281,212,497 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,412,279 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,157,554 ஆக இருந்தது.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக்கள் வங்கியின் 157100190000052 ஆம் இலக்க வங்கி நடைமுறைக் கணக்கு

(i) வழங்கப்பட்ட எனினும், கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 02 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட ரூபா 53,880 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 ட இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விபரம் கண்டறியப்பட முடியாத ரூபா 953,753 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 02 ஆண்டு காலம் பழைமை வாய்ந்த ரூபா 76,600 பெறுமதியான 4 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது ரூபா 376,000 பெறுமதியான தேறாத வைப்புகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) பல வருடகாலமாக நிலவிவரும் ரூபா 643,439 பெறுமதியான இனங்காணப்படாத கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.